1978 மார்ச் 31]

Pulavars Pension Scheme.

@ * 222 *Q.*—THIRU K. S. MANI (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Indigent 'Pulavars' who have applied for pension which is given under the Pulavars Pension Scheme ;

(*b*) the number of such Pulavars, receiving that pension ; and

(*c*) the basis under which pension is granted ?

புலவர்களுக்கு உதவித்தொகை திட்டம்.

திரு. கோ. சி. மணி (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏழைப்புலவர்களுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வேண்டும் என்று எத்தனை பேரிடமிருந்து மனுக்கள் வந்தன ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு அத்தொகை அளிக்கப்படுகிறது ?

(உ) உதவித் தொகை எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 135 பேர்களிடமிருந்து மனுக்கள் வந்தன.

(இ) 1978, பிப்ரவரி திங்கள் முடிய, 5 பேர்களுக்கு அத்தொகை அளிக்கப் பட்டு வருகிறது.

(உ) மாதம் ரூபாய் 150-க்கும் குறைவாய் வருமானமுள்ள, தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும், பலரும் அறிந்த வகையில் தொண்டு செய்ததாகக் கருதப்படும். ஏழைத் தமிழறிஞர்களே இந்நிதியுதவிக்குத் தகுதியானவர்கள். இத்தகையவரிடமிருந்து விண்ணப்பங்கள் செய்தித்தாளில் விளம்பரம் செய்து தமிழ் வளர்ச்சி இயக்குநர் பெறுவார். விண்ணப்பதாரரின் நிதி நிலைமை பற்றிய அறிக்கை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்படும். மற்ற தகுதிகள் குறித்து அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள வல்லுநர் குழுவினால் (Expert Committee) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தகுதியான விண்ணப்பதாரரின் பெயர்கள் உயர் அதிகாரக்குழு

29-3-1978ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(High-power Committee))-க்கு பரிந்துரை செய்யப்படும். உயர் அதிகாரக் குழு தகுதி பெற்றவர்கள் குறித்து இறுதியாக முடிவெடுக்கும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஏழைத் தமிழறிஞர்கள் மாதமொன்றுக்கு ரூ. 100 வீதம் உதவித் தொகை பெற்று பயனடைவர்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: இதுவரையில் ஐந்து புலவர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதிலும் முதல் மாதம் வழங்கப்பட்டதாகவும் அடுத்த மாதங்கள் தொடர்ந்து வழங்கப்படவில்லை என்றும் அறிகிறேன். தொடர்ந்து வழங்க உத்தரவு இடப்படுமா? அந்த ஐந்து பேர் யார் யார்? இன்னும் 50 பேருக்கு வழங்குவதாகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற 45 பேர்களைப் பூர்த்தி செய்வதற்கு ஏதாவது கால கட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உறுப்பினர் அவர்கள் ஒரு மாதம் தான் தரப்பட்டிருப்பதாகவும் மேலும் தொடர்ந்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கூறினார்கள். நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து தருவதற்கான அடிப்படையில்தான் தரப்பட்டிருக்கின்றன.

1. மயிலை திரு. சீனி வெங்கடசாமி, சென்னை.
2. கவிஞர் சுரதா, சென்னை.
3. திரு. தியாகராஜன்.
4. திரு. ஏகாம்பரம்.
5. திரு. கே. ஜி. ராஜு.

மற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு விரைவில் உதவி பெறுவார்கள்.

Headmasters of Middle Schools.

*233 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that G.O. Ms. No. 1219, Rural Development and Local Administration, dated 18-7-77 is not applicable to the Headmasters of Municipal Middle Schools, whereas it is applicable to their counter-parts in Panchayat Union Middle Schools; and

(b) if so, the reason therefor?